Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை (16-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 340

ஜவுளிகளின் எழில்மிகு
காட்சியகம்
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333
(சி-2854)

## பாதுகாப்புக் கண்காணிப்பை மீறி
# மட்டக்களப்பில் புலிகள் தற்கொலைத் தாக்குதல்

## 3புலனாய்வுப்பிரிவினர்உட்பட4பேர்பலி 9பேர் படுகாயம்-கட்டடம் சேதம்

(மட்டக்களப்பு நிருபர்)

**மட்டக்களப்பு நகரில் ஸ்ரீபாலகட்டிடத்தொகுதிக்கு முன்பாக நேற்று முற்பகல் 10. 30மணியளவில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் இராணுவபுலனாய்வுத் துறையைச்சேர்ந்தமூவர்உட்படநான்கு பேர் கொல்லப் பட்டுள்ளனர்**

**இச்சம்பவத்தின் போது இராணுவப் புலனாய்வுத் துறையைச்சேர்ந்தஇருவரும் மற்றும் இரண்டு பெண்கள் உட்பட ஏழுபேருமாக மொத்தம ஒன்பது பேர்படுகாய மடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

மட்டக்களப்பில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஸ்ரீபால கட்டிடத் தொகுதிக்கு முன்பாக இத் தற்கொலைத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் கொல்லப் பட்டும், காயமடைந்துமுள்ள இராணுவப்புலனாய்வுபபிரிவினர் 'புளொட்' அமைப்பைச் சேர்ந்தவர்கள்என்றும் இவர்கள் 1991ம் ஆண்டுகாலப பகுதியில் இராணுவத்தில இணைந்து கொண்டவர்கள என்றும் தெரிய வந்துள்ளது.

இத் தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக

(8ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலை தாக்குதலால் படைத்தரப்பு அதிர்ச்சி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு அதிஉயர் பாகாப்பு வலயத்தில் இடம் பெற்ற இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து சிறிலங்கா படைத்தரப்பு அதிர்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புப் படையினரின் தீவிரசோதனை நடவடிக்கைகள் ரோந்து நடவடிக்கைகள் ஆகியன பலப்படுத்தப் பட்டிருந்த வேளையில் அதனையும் மீறி விடுதலைப்புலிகள் ஊடுருவி இத்தற்கொலைக் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டமை பாதுகாப்பு உயர்அதிகாரிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இதேவேளை இத்தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப்புலிகளுக் கெதிரான இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினருக்கு உதவியாளராக இருந்து செயற்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.[வ]

## 30 தீர்மானங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

### சமுர்த்திக் கொடுப்பனவும் அதிகாப்பு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் சமர்ப்பித்த 30 தீர்மானங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறைந்தவருமானங்களைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தயுவதிகளுக்கும், இளை

(8ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பேச்சாளராக பன்னிபிட்டிய

(கொழுமபு)

இராணுவப் பேச்சாளராகவும், தகவல்தொடர்புபணிப்பாளராகவும் பிரிகேடியர் பராக்கிரம பன்னிபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் லயனல் பலகல்ல இவருக்கான நியமனக் கடிதத்தைகடந்தசெவ்வாய்க்கிழமை வழங்கினார்.

இதே வேளை இராணுவப் பேச்சாளரான சனத்கருணாரட்ண உத்தியோக பூர்வவிஜமாக லண்டனுக்கு பயணமாகியுள்ளார் இதனையடுத்தே பாதுகாப்பு அமைச்சு மேற்படி பதவியை பன்னிபிட்டியவுக்கு வழங்கியுளளது, (இ)

## றெஜி ரணதுங்காவுக்கு மீண்டும்விளக்கமறியல்

(கொழும்பு)

முன்னாள அமைச்சரும் பொது ஜனஐக்கியமுன்னணியின் முக்கிய பிரமுகருமான ரெஜிரணதுங்காவை மீண்டும் இயமாதம் 20ம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் கம்பஹா நீதிவான்உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர் ரெஜிரணதுங்கா சுகவீனம் காரணமாக தற்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்டுள்ளார் ஆஸ்பத்திரியில் இருக்கும்போதே அவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுளளது.

கம்பஹா பெற்றியகொட பகுதியில ஐக்கியதேசியக்கட்சியின் ஆதரவாளர் ஒருவர் தாக்கப்படடு பின்னர் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் படடு உயிரிழந்த சம்பவம் தொடர்பாகவே அமைச்சர் ரெஜிரணதுங்கா கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுளளார்என்பது குறிப்பிடத்தக்கதாகும். (வ)

## சிற்றி ஒவ் றிங்கோ பயண சேவை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

'சிற்றிஒவ் றிங்கோ' கப்பல் சேவை இய மாதம் 30ம் திகதி வரையே சேவையில் ஈடுபடும் என்று, கப்பல் சேவையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் நேறறுத தெரிவித்தன;

காலநிலை சீரின்மை மற்றும திருத்த வேலைகள காரணமாகவே கப்பல்சேவையினை இடை நிறுத்துவதாகவும், மீணடும சேவை அடுத்த வருடம ஜனவரிம தம் 15ந் திகதி ஆரமபிககபபடுமென்று தெரிவிககபபடுகிறது (இ)

## சரத் முனசிங்கா முறையீடு

[கொழுமபு]

முன்னாள் பிரதிசபாநாயகர் சரத்முனசிங்காவின் பாதுகாப்பு பெருமளவில்குறைக்கப்பட்டிருப்பதாக மனிதஉரிமைகள் ஆணைக்குழுவிடம் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இராணுவப் பேச்சாளராகவும் பிரதிசபாநாயகராகவும் இருந்த தனக்கு உயிராபத்து இருப்பதால் உடனடியாகப பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டுமென்றும மனிதஉரிமைகள் ஆணைக் குழுவிடம் முறையீடு செய்துளளார். [வ]

## மண்ணெய் ரூ.2ஆல் குறைப்பு

[யாழ்ப்பாணம்]

மண்ணெண்ணெயின் விலை லீற்றர் இரண்டுரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியம் கூட்டுஸ்தாபன யாழ் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி தற்போது 22 ரூபா45சதமாக விற்பனை செய்யப்பட்ட மண்ணெய் இனி20ரூபா45சதமாக விற்பனை செய்யப்படும். (ந)

## பிஸ்ரல் குழு சூடு பொலிஸார் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களபபு வாழைச்சேனையில இரவு நேரக் காவல் கடமை முடித்து வீடு திருமபிக் கொண்டிருந்த பொலிஸ்கான்ஸ்ரபிள ஒருவர் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் சுடடுக் கொல்லப்பட்டுளளார். மற்றொருவர் படுகாயமடைந்துளளார்.

அண்மைககாலத்தில் மட்டக்களப்பில விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழு தாககுதல்களைத் தீவிரமாகியுள்ளமை இங்குகுறிபபிடத்தக்கது. (இ)

## கண்காணிப்புக் குழு கொழும்பு வருகை

[கொழும்பு]

ஐரோபபிய ஒன்றியத்தைச் சோந்த மூவர் அடங்கியதேர்தல்கண்காணிப்புக் குழுவினர் நேற்று கொழுமபு வந்துசேர்ந்துளளனர்.

இத்தூதுக் குழுவினர் ஜோன தலைமையில் கொழுமபு வந்துள்ளனர் இவர்கள் நாளை தமதுதேர்தல் கண்காணிப்பு வேலைகளில் ஈடுபடவுள்ளதாகவும் ஏனையவர்கள் இம்மாதம் 23பதிகதி,30ம் திகதிகளில் கொழும்பு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது, [வ]

## புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கு சிங்கள இளைஞர்கள்சிலர் உதவி

### ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தன் மீது விடுதலைப புலிகள மேற் கொண்ட தற்கொலைத்தாக்குதலுக்குசிங்களஇளைஞர்கள் சிலர் புலிகளுக்கு உதவியுள்ளனரென்று ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்க அதிருப்தி வெளியிட்டுளளார்.

இராணுவத்திலிருந்து வெளியேறியதிவுலப பிட்டியவைச்சேர்ந்தகுமாரஸிரி என்பவரும் மற்றும் போதைவஸ்துக்கு அடிமையான பலரும் தமக்கு எதிராக விடுதலைப் புலிகளின் விருப்பத்துக்கு அமைய இக் கொலை முயற்சியில் பங்கேற்றனர்;

தற்கொலைத் தாக்குதல் திட்டம் சிங்கள இளைஞர்களின் உதவியுடன் புலிகளால் தயாரிககப் பட்டது. தாக்குதல் தினத்தன்று கொழும்பு நகரசபை மைதானத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டம் நடை பெற்றுக் கொண்டிருந்த வேளை தற்கொலையாளியையும மற்றொருவரையும் குமாரஸிரி எனபவரே வாகனத்தில் ஏற்றி வந்து இறக்கிவிட்டார் எனஜனாதிபதிமேலும்தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு நகரசபைமண்டபத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுஜன

(8ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் கடமையில் ஈடுபடுவோர்

# கட்சிகளைப் பிரதிபலிக்கும் நிற ஆடைகளை தவிர்க்கப் பணிப்பு

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள 12ஆவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் கடமைகளில் யாழ்.மாவட்டத்தில் ஈடுபடவுள்ள தேர்தல் உத்தியோகத்தர்களுக்கான கடமைகள் சம்பந்தமான விளக்கக் கூட்டமும் பயிற்சி வகுப்பும் நேற்றுயாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் கே.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

நூற்றுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் பங்கு பற்றிய இப்பயிற்சி வகுப்பில் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராசா விளக்கமளித்து உரையாற்றுகையில், பின்வரும் அறிவுறுத்தல்களை விடுத்தார்.

★ சென்ற முறைத் தேர்தலின் போது வாக்காளர்களுக்கு மை பூசுதல் முறையாகப் பின்பற்றப்படாததால் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிட்டது எனவே இதனைத் தவிர்க்க இம்முறை தடிப்பாக மைபூச வேண்டும்;

வாக்களிப்பு நிலையத்தில், போட்டியிடும் கட்சிகள் சார்பான பிரசுரங்கள் சுவரொட்டிகள் அல்லது வேறு தஸ்யாவேயுக்கள் காணப்பட்டால் அவற்றை உடன் அகற்றவேண்டும்.

★ தேர்தல் உத்தியோகத்தர்கள் கட்சிகளின் நிறங்களை இயன்றவரை தவிர்த்து தமது உடைகளை அணிந்து வர வேண்டும்

இதேவேளை எதிர்வரும் 4ஆம் திகதி மாலை 6மணிக்கு தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை யாழ் மத்திய கல்லூரியில் ஒன்று கூடுமாறும் அவர்களுக்கு விசேட வசதிகள் இம்முறை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வாக்காளர்களின் நன்மை கருதிஇலங்கை போக்குவரத்துச் சபை விசேட பேருந்து சேவைகளை நடத்தவுள்ளது.

வாக்களிக்கும்முறைபற்றிய விளக்கமும் அங்கு அளிக்கப்பட்டது.

(உ-106,10)

### நாட்டுக்காக தம்முயிரைஈந்த

# படை வீரர்களுக்கு நாடு கடமைப்பட்டுள்ளது

## அனுருத்த உரை

(கொழும்பு)

நாட்டின் ஐக்கியத்தை பேணிக் காப்பதற்காக ஆயிரக் கணக்கான படைவீரர்கள் பலவாறான தியாகங்களை செய்திருக்கிறார்கள் அவர்களுக்கு ஒரு போதும் துரோகம் விளைவிக்கக் கூடாது;

இவ்வாறு அமைச்சர் அனுருதத ரத்வத்த தெரிவித்துள்ளார்;

போர்க்களத்தில் உயிரிழந்த மற்றும் அங்கவீனமான போர் வீரர்களின் குடும்பங்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்கான ஆவணங்களை வழங்கும் வைபவம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் அண்மையில் இடம்பெற்றது.

அவர் மேலும் கூறியதாவது;

நாட்டுக்காக தமதுயிரை நீத்த ஒவ்வொரு வீரருக்கும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதோடு அவர்களின் குடும்பங்களுக்கு எவ்வகையிலும் உதவ்ளை வழங்க திடசங்கற்பம் பூண்டுள்ளது;

நாடு தற்போது எதிர்நோக்கும சவால்களை வேட்பாளர்கள் அனைவரும் தெரிந்திருக்கிறார்கள் இந்த நிலையில் போலிப் பிரசாரம செய்து மக்களை ஏமாற்றமுடியாது.

இவ்வாறு ஏமாற்ற நினைக்கும் வேட்பாளர்கள் களத்தில் பலியான 18 ஆயிரத்துக்கும் அதிகமான படைவீரர்களினதும் அங்கவீனமுற்ற 10 ஆயிரம் வீரர்களினதும் பெற்றோர் பிள்ளைகள் உறவினர் ஆகியோர்க்கு பதில் சொல்ல தயாராக வேண்டிவரும் எனவும் தெரிவித்தார்.

(உ-7)

## அனலைதீவு விவசாயிகள் கஷ்டம்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவுப் பகுதியிலுள்ள விவசாயிகள் வ்வசாய ஆலோசனைகளைப் பெறுவதற்கு வேலணையிலுள்ள கம நலச்சேவை நிலையம அல்லது யாழ்ப்பாணத்தில் உளளவிவசாயத்திணைக்களத்திற்குச் செல்ல வேண்டியிருப்பதாகவும் இதற்கு இரண்டு நாட்களை ஒதுகக வேண்டியுள்ளதாகவும கவலை தெரிவிக்கப்படுகிறது.

அனலைதீவில்இரு நூறுக்கு மேற்பட்ட வவசாயக் குடுமபங்கள் உள்ளதாகவும் இதனாலபெரியகஷ்டத்தினை அனுபவித்து வருவதாகவும் மேலும தெரிவிக்கபபடுகிறது.

(எ-75)


## பதவி வெற்றிடம்

பதவி: உதவி ஆசிரியர் ஆண்கள் (இரவுக் கடமை)
,, ,, பெண்கள் (பகல் கடமை)

கல்வித் தகைமை: க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி (பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

குறிப்பு: சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் தகைமைச் சான்றிதழ் மற்றும் இருவரின் நற்சான்றிதழ் ஆகிய வற்றுடன் 18-11-2001 (ஞாயிறு) காலை 10 மணிக்கு நேரில் வரவும்

நிர்வாகம்

வலம்புரி
15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.
(யா/வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்)


## கடையில் திருட்டு

(காரைநகர்)

காரைநகர் வலந்தலைப் பகுதியில் கடந்த 12ம் திகதி தனியார் கடையொன்றுள் ஓடு பிரித்து இறங்கிய திருடர் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத் திருட்டு இரவு ஊரடங்கு வேளையில் நடைபெற்றுள்ளதாகவும் இது குறித்து ஊர்காவற்றுறை பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது போன்ற ஒரு திருட்டு இப்பகுதியில் இதற்கு முன்பும் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-238)

## தபால் பொதிகள் எடுத்துவருகை

(யாழ்ப்பாணம்)

நேற்று வந்துசேர்ந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலம்யாழ் குடாநாட்டுக்கான தபால்கள் அடங்கிய 300 பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும்;

குடாநாட்டில்இருந்துவெளியூர்தபால்கள் அடங்கிய 35 பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும்பிரதம தபாலகவட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)

## இறுதிப் பரீட்சை மார்ச்சில்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் இறுதி ஆண்டுஆசிரிய மாணவர்களுக்கான பரீட்சைகள் அடுதத ஆண்டு மார்ச்மாதம் நடைபெறவுள்ளது.

இதேவேளை மேற்படி கலாசாலை விடுமுறைக்காக இம் மாதம் 29 ஆம் திகதி மூடப்பட்டு புதிய ஆண்டு ஜனவரி மாதம் முதலாம திகதி மீண்டும் ஆரமபமாகவுள்ளது;

(உ-9)

## 2002 ஆம் ஆண்டின் இலவச பாட நூல்

(யாழ்ப்பாணம)

2002 ஆம ஆண்டிற்கான இலவசப்பாடநூல் விநியோகம் செய்யப்படவுள்ளதால் புத்தக விபரங்களை சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ். வலயபிரதிக் கல்விப் பணிப்பாளர்வரதராஜா தெரிவித்துள்ளார். (எ-9)

### ஊர்காவற்றுறையில்

## மின்சாரம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நகரப் பகுதியில் உள்ள மின்பிறப்பாக்கி மூலம் ஒரு நாளைக்கு 5மணித்தியால நேரம் அப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இந்த மினசார விநியோகம் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரையும், மாலை 6 மணி தொடக்கம் 7 மணிவரையும் இடம்பெற்றுவருவதாகவும் குறிப்பிடப்படுகிறது. (எ-75)

## கணிதபாட பதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயப் பாடசாலைகளின் தரம் 9 கணிதபாட வினாத்தாள் மதிப்பீடு இன்று யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்;

இதேவேளை, யா/ இந்துக் கல்லூரியில் மேற்படி பாட வினாத்தாள் மதிப்பீடு இடம் பெறவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது; (உ-3)


# அழைப்பிதழ்

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ்விவகாரங்கள் அமைச்சு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும்

## யாழ் மாவட்ட 'மூத்த கலைஞர் கௌரவம்' 2001

இடம்
நல்லூர் துர்க்கா மணிமண்டபம்

காலம்
18 . 11 . 2001 ஞாயிற்றுக்கிழமை
காலை 09.30 மணி

தலைமை
திரு . து . வைத்திலிங்கம
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ் . மாவட்டம்)

பிரதம விருந்தினர்
திரு . வே . இரகுநாதன்
(செயலாளர், வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு.)

சிறப்பு விருந்தினர்கள்
பேராசிரியர் பொ . பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)
இசைப்பேரரசு ந . வீரமணிஐயர்
(கலாபூசணம சாகித்திய சிரோன்மணி, இணுவில்)

## நிகழ்ச்சி நிரல்

காலை

09.30மணி:- கலைஞர்கள் மங்கள வாத்தியங்கள் சகிதம் நல்லூர் ஆலயமுன்றலிலிருந்து துர்க்கா மணிமண்டபம் வரை ஊர்வலமாக அழைத்து வரல்.

10.00மணி:- மங்கள விளக்கேற்றல்

10.10மணி:- இறை வணக்கம
திருமதி ஞா. சிவநேசன்
(ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்)

10.15மணி;- வரவேற்புரை
திரு. எஸ். தெய்வநாயகம்
(உதவிப் பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)

10.25மணி:- தலைமையுரை
திரு து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்)

10.40 மணி:- மூத்த கலைஞர் கௌரவம்

12.30 மணி:- சிறப்பு விருந்தினர்கள் உரை

01.00 மணி;- பிரதம விருந்தினர் உரை

01.15 மணி:- பதிலுரை
கலைஞர்கள் சார்பில் கலாபூஷணம்
திரு. எஸ். கணபதிப்பிள்ளை

01.30 மணி:- நன்றியுரை

பலதரப்பட்ட கலைத்துறையில் தங்களை அர்ப்பணித்து சேவையாற்றிய யாழ் மாவட்டத்தைச்சேர்ந்த 80 கலைஞர்களுக்கு பாராட்டும் கௌரவமும் அளிக்கப்படும். இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,

248, 1/1காலி வீதி,
கொழும்பு-04

(கி-2878)

ஜனாதிபதியின் புலமைப் பரிசிலுக்கு

# யாழ். மாவட்டத்திலிருந்து 100 மாணவர்கள் தெரிவு

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் விசேட புலமைப் பரிசில் திட்டத்திற்காக யாழ். மாவட்டத்தில் 100 மாணவர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

தரம் 6 இல் கல்வி கற்கும், இதுவரை புலமைப் பரிசில் பெறாத மாணவர்கள் தெரிவு செய்யப்படவிருப்பதாக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா தெரிவித்துள்ளார்.

யாழ்:குடாநாட்டில் உள்ள ஐந்து கல்வி வலயங்களில் இருந்து தகுதியான மாணவர்களைத் தெரிவு செய்து, விபரங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு பணிப்பாளர்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (செ)

# வழிகாட்டல் விதியை மீள வகுத்தமைக்க நீதிமன்றம் ஆலோசனை

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் வழங்கியிருந்த வழிகாட்டல் தொகுதியின் 3 வது விதியை சட்ட உள்ளடக்கத்துடன் மீள வகுத்தமைப்பதற்காக மீண்டும் ஒரு சுற்று பேச்சுக்களை அசோசியேற்றட் நியூஸ் பேப்பர் சிலோன் நிறுவனத்துடன் நடத்துமாறு மேல்'நீதிமன்றம் அண்மையில் மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் சலீம் மர்சூப் அவர்களை கேட்டிருக்கிறது. இதன்படி சட்டமா அதிபர் தேர்தல் ஆணையாளருக்கு உரிய ஆலோசனையை வழங்கவுள்ளார்.

ஏரிக்கரைப் பத்திரிகைகள் ஐ.தே.க. வை அவமதிக்கும் விதத்திலும் பொ ஐ மு. வை ஆதரிக்கும் விதத்திலும்செய்திகளை வெளியிடுவதாக ஐ. தே. க. தவிசாளர் கரு ஜயசூரிய தாக்கல் செய்த மனு மீது கடந்த திங்களன்று மேல் நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்துள்ளது. (உ)

# தேர்தல்வன்முறை சம்பவம் நாளுக்கு நாள் அதிகரிப்பு

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல செய்யப்பட்ட தினத்தில் இருந்து நாட்டில் தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலனறுவ, அனுராத, புரம், சிலாபம், புத்தளம், ஆகிய பகுதிகளில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தும அதிகரித்த வண்ணமுள்ளது இதனை அடுத்து இத்தேர்தல் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும்பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை நேற்று மட்டும் 70வன் முறைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது. (வ)

# மகளிருக்கான வீட்டுத் தோட்ட விவசாய பயிர்ச் செய்கைப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் கீழ் உள்ள சுருவில விவசாயக் கிராமத்தில் மகளிருக்கான வீட்டுத் தோட்ட விவசாயப் பயிர்ச்செய்கை பயிற்சி வகுப்பு ஒன்றினை கெயர் நிறுவனம் நடத்திவருகின்றது.

சுருவில் கிராமத்தைச் சேர்ந்த 30 பெண்களுக்கு, இவ்வாறு வீட்டுத் தோட்டப் பயிற்சி வகுப்பு இடம்பெற்று வருகின்றது.

கடந்த வருடம் அயல் கிராமமான புளியங்கூடலில், மேற்படி மகளிருக்கான வீட்டுத் தோட்டப் பயிற்சி வகுப்பினை கெயர் சர்வதேச நிறுவனம் நடத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-75)

# வடபகுதி மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு

## ஆட்சிப்பொறுப்பேற்றால் சாத்தியம் என்கிறார் ரணில்

(கொழும்பு)

நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஐக்கியதேசிய முன்னணி ஏற்றவுடன் வடபகுதி மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அனைத்து மீன்பிடித் தடைகளும் நீக்கப்படுமென ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாஎல பகுதியில் நடைபெற்ற கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரை யாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடபகுதி மீனவர்கள் இயந்திரப்படகு மூலம்கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைபாதுகாப்புப் படையினரின் ஆதரவுடன் நீக்க ஆவன செய்யப்படும் எனக் குறிப்பிட்டார்.

மேலும் குறிப்பிடுகையில்; இந்த அரசாங்கத்தின் காலத்தில் மீனவர்களுக்கான எரிபொருள் தட்டுப்பாடு மிகவும் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

இதனால் மீனவர் பெரும் சிரமப்படுவதை நாம் அடையாளம் கண்டுள்ளோம்; எனவே அவர்களின் பிரச்சினைகளை ஆட்சிப் பொறுப்பேற்றவுடன்தீர்த்து வைப்போமென்றார். (உ-5)

# ஐ.தே.க - பொ. ஐ மு கைகலப்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு நகரில் நடைபெற்ற ஐக்கியதேசியக் கட்சி பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சியின் ஆதரவாளர்களுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையே பெரும் கைகலப்பு ஏற்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு 7மணியளவில கூட்டத்தில் கலந்து கொண்ட இரு சாராருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதம்கைகலப்பாக மாறியது

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த பலரை நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக நீர்கொழும்பு பொலிசார்தெரிவித்துள்ளனர் (ந-4)

# நேருவின் சிலை திறப்பு

[கொழும்பு]

சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதம மந்திரி ஜவகர்லால் நேருவின் சிலை ஒன்றை இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார்.

இச்சிலையைத் திறந்து வைத்துப் பேசிய ஜனாதிபதி சந்திரிகா பல நூற்றாண்டு காலமாக பேணப்பட்டு வந்த இந்தியாவுக்கும் இலங்கைக்குமான நல்லுறவைத் தான் தொடர்ந்து பேணப் போவதாக கூறியுள்ளார். இவ்வைபவத்தில் இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தியும் கலந்துகொண்டார். [வ]

## மனித உரிமைகள் தினத்தையொட்டி

# மாணவரிடையே கட்டுரைப் போட்டி

(மீசாலை)

டிசம்பர் 10 ஆம் திகதி அனுட்டிக்கப்படவுள்ள உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டுகட்டுரைப்போட்டி ஒன்றினை க. பொ. த. சாதாரணதர, க. பொ. த. உயர்தர மாணவர்கள் மத்தியில் கரித்தாஸ் இலங்கை செடெக நிறுவனம் நடத்தவுள்ளது.

இப்போட்டி தமிழ், சிங்களம், ஆங்கிலம்ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறவுள்ளது.

கட்டுரைகள் ''வாழும் உரிமையை நிலைநாட்டுதல்'' என்னும்தலைப்பில் ஆயிரத்து 500 சொற்களுக்கு மேற்படாது அமைதல வேண்டும்;

கட்டுரைகளை இம் மாதம் 25ஆம்திகதிக்குமுன்னர்மனித உரிமைகள் இணைப்பதிகாரி' (இயக்குநர் ஊடாக), கரித்தாஸ் இலங்கை- செடெக் 133, கிங்சி வீதி, கொழும்பு 08 என்னும்முகவரிக்குஅனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ-229)

# மருத்துவ முகாமும் பிரார்த்தனையும்

(தென்மராட்சி)

வடபிராந்திய சத்திய சாயி நிலையங்களின் இணைப்புக் குழு பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் 76 வது பிறந்த தினத்தை முன்னிட்டு நாளை காட்டுப்புலம் பிரதேசத்தில் மருத்துவ முகாமையும் பிரார்த்தனையையும் நடாத்தவுள்ளது. [உ-77]

# குளறுபடிகள் அற்றதாக தேர்தல்அமைய வேண்டும்

## பேராசிரியர்கள் வற்புறுத்து

(கொழும்பு)

டிசம்பர் 5ஆம திகதி தேர்தலை குளறுபடிகள் அற்ற தேர்தலாக நடத்துவதற்கு தமது முழுப்பலத்தையும் திடசங்கற்பத்தையும்பயன்படுத்த முன்வர வேண்டுமென்று பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர்கள விரிவுரையாளர்கள் 71 பேர் கள அரசபணியாளர்களையும், பொலிஸாரையும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சட்டத்திற்கு விரோதமானதும்,நியாயமற்றதும, ஒழுக்க நெறிகளுக்கு விரோதமானதுமான மேலதிகாரிகளின பணிப்புரைகளை துணிச்சலுடனும் திடசங்கற்பத்துடனும்நிராகரித்து விட வேண்டும் எனக் கேட்டுள்ளபேராசிரியர்கள்,

சுதந்திரமானதும் அமைதியானதுமான தேர்தல் குடிமக்களின் பிரிக்கமுடியாத உரிமையென்பதால் இதனை அதிகார துஷ்பிரயோகம் மூலமோ வன்முறைகள், மூலமோ மோசடிகள் மூலமோ கேடுசெய்வது மக்களுக்கெதிரான மன்னிக்க முடியாத குற்றமாகும் என வலியுறுத்தியுள்ளனர்.

மேற்படி பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் குழுவில் திருமதி தேவநேசன, டாக்டர் திருமதி சமரநாயகம், டாக்டர் ரீ.ஆனந்தமூர்த்தி ஆகிய தமிழர்களும் அடங்கியுள்ளனர். (உ)


# சம்பந்தர் மருத்துவமனை

## 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்

★ வார்ட் (WARD) வசதிகள்
★ O.P.D. (வெளிநோயாளர் சிகிச்சை) காலை 8 மணி முதல் இரவு 9 மணிவரையும்
★ வைத்திய நிபுணர்கள்சேவை (Specialist Consultation) மாலை 4 மணிக்குப்பின்
★ E.C.G., NEBULIZER (ஆஸ்த்மாவுக்கு புகை பிடித்தல்)
★ வார்ட்டில் தங்கும் நோயாளர்களை வைத்திய நிபுணர்கள் (Specialist) பார்வையிடுவர்.

விசேடமாக

முதியோர்கள் வைத்தியம், உணவு ஆகியவற்றுடன் கூடிய பராமரிப்பு.
நோய் உள்ள முதியோர்கள்.
நோய் அற்ற முதியோர்கள்.

இரு பாலாரும் அனுமதிக்கப்படுவர்.

மேலதிக விவரங்களுக்கு

SAMPANTHAR MODERN HEALTH CARE

No. 60, Arasady Rd. (Near Thaddatheru Junction) JAFFNA. (C-2851)

# உயர்தர மாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல: 83 தொகுப்பு ரீ. மயூரன்

### பொது அறிவு

1) நேபாள அரச குடும்பம் மீண்டும் ஒரு உயிரிழப்பை சந்தித்துள்ளது. இவ்வாரம் விபத்தில் உயிரிழந்த நேபாள இளவரசியின் பெயர் என்ன?

1) தேவயானி 2) பிரெக்ஷா
3) அஃகிஷா 4) திபேந்திரா

2) அண்மையில் மீண்டும் அமெரிக்காவில் நடைபெற்ற விமான அனர்த்தம் அமெரிக்காவின் எந்நகரில் இடம் பெற்றது?

1) வாஷிங்டன் 2) நியூயோர்க்
3) ஒட்டாவா 4) வன்கூலர்

3) ஜப்பானிய தீவுகளில் பெரியது எது?

1) ஹொன்ஷீ 2) அலெக்
3) கட்ஷா 4) வாவுஸ்

4) மிகவும் பிரகாசமான கோள் எது?

1) செவ்வாய் 2) புதன்
3) சுக்கிரன் 4) புளுட்டோ

5) மோடம் (Modem) என்னும் கருவி எதனது இணைப் பாகும்.

1) செய்மதி 2) கணனி
3) தொலைபேசி 4) பக்ஸ்

★ சுருக்கமான விடை தருக.

6) இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

7) சமுர்த்தித் திட்டத்திற்கு பொறுப்பாக உள்ள அமைச்சு எது?

8) பச்சைப் புத்தகம் (Green Books) எந்த நாட்டினது அலுவலகக் கோவை ஆகும்?

9) ASEAN அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் எவை¿

10) தேசிய சுங்கதினம் ஆண்டின் எப்பகுதியில் கொண்டாடப்படுகிறது?

★ பின்வரும் கூற்றுக்கள் சரி ஆயின் ✓ எனவும் பிழை ஆயின் × எனவும் எதிரே உள்ள அடைப்பில் இடுக.

11) செப்டெம்பர் 1-லிபியாவின் சுதந்திர தினமாகும் ( )

13) 1924 ஆம் ஆண்டு லெனின் இறந்தார் ( )

13) 1924 இல் சீனா குடியரசானது ( )

14) வேம்படி மகளிர் கல்லூரி வெஸ்லியன் மிஷனரிமாரால் உருவாக்கப்பட்டது ( )

15) 1900 ஆண்டு மோனிங் ஸ்ரார் எனும் ஆங்கிலப் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது ( )

★ பின்வரும் நாடுகளில் பாவனையில் உள்ள நாணய அலகைத் தருக.

16) ஜப்பான் ——————

17) பர்மா ——————

18) வத்திக்கான் ——————

19) பெல்ஜியம் ——————

20) துருக்கி ——————

**அறிவியல் பகுதி**
**வினா இல: 83**
"வலம்புரி"
இல: 15வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ______________

சொந்த முகவரி: ______________

கற்கும் பாடசாலை ______________

மாணவர் கையொப்பம்: ______________

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு-:**

விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 21.11.2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத் தக்கதாக அனுப்பிவைக்கவும்.

# அறிவியல் வினா இல-82 விடைகள்

1) 1844
2) ஹென்றி மக்லம்
3) சுவிற்சர்லாந்து
4) 1930
5) ஜுலை மாதம் முதல் சனி
6) றொபெட் ஓவன்
7) கண்டி
8) மக்கள் வங்கி
9) ஐக்கிய தீபம்
10) 8
11) அமெரிக்க
12) கணனி, மொடம் தொலைபேசி பரிவர்த்தனை கருவி
13) சிங்கப்பூர்
14) வீரசிங்கம்
15) மூளாயில்
16) 1943
17) 1952
18) 1895
19) 1930
20) 1964
21) 63519
22) 63872
23) 632413
24) 4237
25) 4176
26) 180m
27) [3]
28) [1]
29) [5]
30) [1]
31) சுந்தரம்
32) சந்திரன்
33) தினகரன்
34) கடலரன்
35) தண்டுலம்
36) கண்டனம்
37) பச்சை-சிவப்பு
38) கறுப்பு
39) மஞ்சள்-சிவப்பு
40) நிலம்—பச்சை

# நாட்டின் பாதுகாப்புக்கு ஒற்றையாட்சியே சிறந்தது

## ஜே. வி. பி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த வருவதானால் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென ஜே. வி. பி. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன் நிபந்தனை விதித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவதுடன் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாலும் நாட்டின் பாதுகாப்பிற்கு ஒற்றையாட்சி முறையே சிறந்தது. அதனை விடுத்து அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் கூட்டாட்சி அறிமுகப்படுத்தப்படுமாயின் நாடு பிளவுபடுவதற்கு வாய்ப்பாகிவிடுமென்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-5)

# அறிவியல் வினா இல-82

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர்விபரம்

★ சி. கார்த்திகா. நாவலர் வீதி, ஆனைப்பந்தி
★ அ. தீபன், அளவெட்டி
★ தி. சுமங்கலா, கந்தர் மடம்
★ உ. காந்தரூபன், அளவெட்டி
★ சி. சிவதா, யாழ்ப்பாணம்
★ பு. கோபிறாஜ். புத்தூர் சோமாஸ் கந்தா கல்லூரி
★ ரா. கேசவன், கொக்குவில் இந்துக் கல்லூரி
★ சி. சயந்தன், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
★ பா. சிவசங்கர். வட்டு. யாழ்பாணக் கல்லூரி
★ வி. தமிழ்ச்செல்வி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

### நுண்ணறிவு

★ ஒவ்வொரு வினாவிலும் முதலில் உள்ள சொல்லானது ஓர் இரகசியக் குறியீடாக மாற்றப்பட்டு அதற்கெதிரில் தரப்பட்டுள்ளது. அது மாற்றப்பட்ட விதத்திற்கமைய அதன் கீழ் உள்ள சொல்லிற்குரிய இரகசியக் குறியீட்டை கண்டறிக.

21) குடியரசு-சுகுயடிர
புரவலர் ————

1) ர்வபுரல 2) ர்புவரல
3) புர்ரவல 4) ரபுர்வல

22) வல்லினம்-ஒளிர்தல்
வளர்ந்த ————

1) ஒபலிமன 2) ஒலிபமன
3) ஒனலிமன 4) தபலிமன

23) இந்திரன்-ஆதிணியற்
ஐசுவரியம்————

1) ஏங்ல்யும்பி 2) எஞலிமுவ்வி
3) எஞலமிமப் 4) ஐவுலுமுவ்வி

24) கணவன்-வணகன்
அப்பாவி————

1) ப்அபாவி 2) பாவிப்அ
3) பாப்அவி 4) ன்வணக

25) புதர்கள்-முதல்நற்
கலாசாரம்————

1) ஙவாஞாலய் 2) ஙவாடாலய்
3) வாஙலாடாய் 4) ஙஞாவாலய்

★ பின்வரும் எண்தொடர்களில் இடைவெளியில் வரும் எண்ணை கண்டறிக.

26) 2, 5, 3, 4, 4, 3, ————
27) 3, 9, 21, 42, ————
28) 60, 5, 30, 10, 15, ————
29) 10, 2, 8, 3, 5, 1, ————
30) 2, 3, 5, 8, 13, ————

★ கீழே தரப்பட்டுள்ள பதங்களை குறிப்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள இரகசிய குறியீட்டு முறையை கண்டுபிடித்து அப்பதங்களை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

கணபதி, குலநிதி, தினபதி, கணகண, பசுபதி

31) MLPM: ————
32) SRTM: ————
33) SRSR: ————
34) PXPM: ————
35) KAYM: ————

★ பின்வரும் சொற்தொடரில் ஒருசொல்மட்டும் வேறுபட்டுள்ளது. அதன்கீழ் கீறிடுக.

36) அரகர, படபட, கரகர, சரசர, கலகல
37) அம்பு, சிலம்பு, அலம்பி, கொழும்பு, குறும்பு
38) மண்ணெய், நீர், பெற்றோல், டீசல், ஒயில்
39) MNO, PQR, CDF, GHI, KLM
40) 846756, 799457, 846734, 653432, 674531,

# பாராட்டிக் கௌரவிப்பு

தம்பசிட்டி ஞானியார் கல்விக்கழகத்தால், வடமராட்சி பிரதேசத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 30 மணிக்கு வட-இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கழகத்தலைவர் வே. நவரத்தினராஜா தலைமையில்நடைபெறும் இந்நிகழ்விற்குஆரம்பகல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. கமலானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ-23)

# இராசிபலன்

16-11-2001
கார்த்திகை 01 வெள்ளி
பிரதமை ந. ப. 12.06
அனுஷம் மு. இ. 8.51
ராகுகாலம் 10.37-12.07
சுபநேரம் 6.07-7.37
ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம்

**மேடம்**
பிரயாணபயம், உடல் வியாதி. காரியதடங்கல், அதிகாரிகள் வெறுப்பு,

**இடபம்**
சுவாரஷ்யம், நண்பர்கள் சந்திப்பு, காரியநன்மை, குடும்பசுகம்.

**மிதுனம்**
காரியஅனுகூலம், உடல் நலம், மனமகிழ்ச்சி, தொழில் சிறப்பு;

**கடகம்**
தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, குடும்ப தகராறு, முயற்சிதாமதம்;

**சிங்கம்**
ரோகம், மனச்சஞ்சலம், தலைவரவு, காரியதாமதம்.

**கன்னி**
தனலாபம், அந்நியர்சந்திப்பு, காரிய அனுகூலம், தெய்வதரிசனம்.

**துலாம்**
பெண்கள்உதவி, முயற்சி தாமதம், வாக்குகலகம், அதிகாரம்;

**விருச்சிகம்**
கற்பனைமிகுதி, நல்ல முயற்சி, உஷ்ண வியாதி, முயற்சிநன்மை;

**தனுசு**
அமைதிக்குறைவு, சுப செலவு. காரியஅலைச்சல், பிரயாணம்,

**மகரம்**
தெய்வதரிசனம், உறவினர் சந்திப்பு, பொருள்சேர்க்கை, காரியநன்மை,

**கும்பம்**
தொழி முன்னேற்றம், காரியதாமதம், நல்லசெய்தி, தனலாபம்.

**மீனம்**
புதியமுயற்சி, தேவையற்ற பயம், உடல்வியாதி, திடீர் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## இன்று ஒரு தகவல்

# வாழ்த்தும் வசையும்

குருநானக் அவர்களும் சீடர் மர்தானாவும் ஒவ்வொரு ஊராகச் சென்று கொண்டிருந்தனர். அப்படிச் செல்கையில் ஒரு ஊரில் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்புக் கிடைத்தது. அருமையான விருந்தும் தந்தனர். அவர்களிடம் விடைபெறும்போது குருநானக் ''ஒரே இடத்தில் இருக்காதீர்கள், அங்கும் இங்கும் எங்கும்பரவிவாழுங்கள்'' என்றார்.

மர்தானா இதைக்கேட்டுத் திகைத்தார். ''என்ன நம் குரு இவர்களைப் பார்த்து ஒரே இடத்தில் மகிழ்ச்சியாக வாழுங்கள் என்று வாழ்த்தாமல் அங்கும் இங்கும் எங்கும் அலையுங்கள் என்று சபித்து விட்டாரே, நல்லவிருந்தோம்பலுக்குத் தண்டனையா? என்று நினைத்தார். இருவரும் அடுத்த ஊரை அடைந்தனர். அந்த ஊர்மக்கள் இருவரையும் பொருட்படுத்தவே இல்லை. உணவு நேரம் வந்தும் யாரும் இவர்களை உண்ண அழைக்கவில்லை.

இப்படி இருந்தும் அந்த மக்களைப்பார்த்து குருநானக் ''நீங்கள் எல்லோரும் இங்கேயே நிலைத்து வாழ்வீர்களாகுக?'' என்று வாழ்த்தி விட்டு அங்கிருந்து புறப்பட்டார். குருவின் செயல்கள் மர்தானாவுக்கு வருத்தத்தை ஏற்படுத்தின. குருவைப்பார்த்து, ''ஐயா! நம்மை நன்கு சிறப்பித்துப் போற்றியவர்களை, அங்கும் இங்கும் எங்கும் அலையுங்கள் என்று சபித்தீர்கள், நம்மை ஒரு பொருட்டாக மதிக்காதவர்களை நிலைத்து ஒரே இடத்தில் வாழுங்கள், என்று வாழ்த்தினீர்கள், இது நியாயமா?'' என்று கேட்டார்.

நல்ல பண்புள்ளவர்கள், விருந்தோம்பும் இயல்புடையவர்கள் எங்கு சென்றாலும் அங்கு இந்தப் பண்பைவிட மாட்டார்கள், அதனால் உலகமெங்கும் நற்பண்புகள் பரவும், அதனால் தான் அவர்களை அப்படிவாழ்த்தினேன், நற்பண்பு இல்லாதவர்கள் இருந்த இடத்தில் இருப்பதுதான் உலகத்திற்கு நல்லது, ஆகவேதான் அவர்களை அப்படிச் சபித்தேன், என்று விளக்கம் தந்தார் குருநானக்.

பேராசிரியர் எ. சோதி

யாழ். குடாநாட்டில்

# பொதி செய்யப்பட்ட பால் விரைவில் விற்பனைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தால் பால் பைக்கற்றுகள் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கேற்ற வகையில், பால் பைக்கற் உற்பத்திநிலையத்திற்கான கட்டட வேலைகள் பூர்த்தியாகியுள்ள போதிலும், இயந்திர சாதனங்கள் வந்து சேராமையால் சிறிது தாமதம் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திட்டம் அமுல் செய்யப்படும் பட்சத்தில் 50 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுவதுடன்,

குடாநாட்டிலுள்ள பால்ப் பண்ணையாளர்களிடம் இருந்து மேலதிகமாக ஆயிரம் லீற்றர் பாலை கொள்வனவு செய்யவேண்டிய தேவை ஏற்படுவதால், அவர்களுடைய நலன்களும்பாதுகாக்கப்படும் என யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-19-9)

# தேர்தல் கடமையில் 5 ஆயிரம் படையினர்

(கொழும்பு)

எதிர் வரும் பொதுத் தேர்தலில் பாதுகாப்புக் கடமையில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்துள்ளார்.

சுமார் 5 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் தேர்தல் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளமை தொடர்பாக இராணுவத் தலைமையகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் அவர்கள் இக்கடமையில் ஈடுபடுவரென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

# மெய்வல்லுநர் சம்மேளன நிர்வாகக்குழு கலைப்பு

(கொழும்பு)

இலங்கை தேசிய மெய்வல்லுநர் சம்மேளன நிர்வாகக் குழு கலைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மெய்வல்லுநர் சம்மேளன திட்டங்களை முன்னெடுத்து செல்லும் பொருட்டு புதிய இடைக்காலக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அடுத்த ஆண்டு இலங்கையில் இடம்பெறவுள்ள ஆசிய மெய்வல்லுநர் போட்டித் தொடரை சிறப்பாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

44நாடுகளைச் சேர்ந்தஆயிரத்து 500 வீர, வீராங்கனைகள் இப்போட்டித் தொடரில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-2)

இம் மாதம் 20 முதல் டிசம்பர் 10 வரை

# தேர்தல் பணியாளர்களின் லீவுகள் யாவும் இரத்து

யாழ். குடாநாட்டில் தேர்தல் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றவுள்ளவர்களுக்கான லீவுகள் யாவும் இம் மாதம் 20 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எக்காரணம் கொண்டும் குறிப்பிட்ட காலப்பகுதியில் லீவு வழங்கப்படமாட்டாதெனவும்,

தவிர்க்க முடியாதகாரணங்களால் லீவுகள் தேவைப்படும் பட்சத்தில் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ,யாழ் அரசஅதிபர் ஆகியோருடன் தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-10,106)

'உ' அட்டை வைத்திருப்போர்

# நிவாரணம் பெறுவதில் நெருக்கடி அதிகாரிகள் அசிரத்தை காரணமாம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இருந்து யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்துள்ள 4ஆயிரத்துக்கு மேற்பட்ட 'உ'அட்டைவைத்திருப்பவர்களுக்கு அமைச்சர் கே என். டக்ளஸ்தேவானந்தாவின் பணிப்பின்பேரில் மூன்று மாதகாலத்துக்குநிவாரணம் வழங்கப்பட்டுவருகின்றது.

இதன் முதற் கட்ட விநியோகம் இவ்வாரம் முதல் வடமராட்சி,வலிகாமம் பிரதேசங்களில், கொடிகாமம் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப் படுகின்றது.

ஆயினும், வலிகாமம் பிரதேசத்தில் தஞ்சமடைந்திருக்கும் ஆயிரக்கணக்கான 'உ' அட்டை வைத்திருப்போர் உடுவில்-மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள ஒரேயொரு கூட்டுறவுக் கிளையில் மட்டும் நிவாரணம் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால்,பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வலிகாமத்திலுள்ள, யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்,சங்கானை, சண்டிலிப்பாய்,உடுவில்,தெல்லிப்பழை ஆகிய ஏழு பிரதேச செயலர் பிரிவுகளில் தஞ்சமடைந்திருக்கும் தென்மராட்சி 'உ' அட்டைவைத்திருப்போருக்கு ஒரேயொரு கிளையில் மட்டும் நிவாரணம் பெற ஏற்பாடுசெய்யப்பட்டமை குறித்தும் அதனால் தாம்அடைந்து வரும் சிரமங்கள் குறித்து மிகுந்த கவலையும் வேதனையுமசம்பந்தப்பட்டவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

உடுவில்-மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளையில் நிவாரணத்தைப் பெற பலர் ஒரே நேரத்தில் கூடுவதால் பலமணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலைதினசரிஏற்பட்டுவருவதுடன் இதனைத் தவிர்ப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் எதனையும் தென்மராட்சி பிரதேச செயலகம் மேற்கொள்ளாமை குறித்தும் பாதிக்கப்படுவோர் சார்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுளளது

இதே வேளை, இவர்களுக்கான முதலாம் கட்ட நிவாரணக் கொடுப்பனவு விரைவில் நிறுத்தப்பட்டு மறு கட்டம் ஆரம்பிக்குப் பட்சத்தில் பலர் மேற்படிநிவாரணத்தைஇழக்கும்நிலைஏற்படலாம்எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (உ-77)

## சாரண ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(மீசாலை)

தென்மராட்சி வலய சாரண, குருளைச் சாரண ஆசிரியர்களுக்கானகலந்துரையாடல் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ''ஜம்போறி'' க்கு செல்லும் ஆசிரியர்களை தெரிவு செய்தல், சாரணிய செயற்பாடுகளை விரிவுபடுத்துதல், மேலதிக பயிற்சிகள் வழங்குதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறுகேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (செ-229)

## பண்ணிசை வதிவிட கருத்தரங்கு

(நல்லூர்)

யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பண்ணிசை வதிவிடக் கருத்தரங்கை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, அமைச்சின் செயலாளர், வே. ரகுநாதன். அமைச்சில் ஆரம்பித்து வைத்தார்.

அமைச்சின் உயரதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்த, இப்பண்ணிசைக் கருத்தரங்கின் போது, பண்ணிசைப் பாடல்களைப் பிரித்துப் பாடுவதற்கான பயிற்சியை அருளிசையரசு. தாவடியூர் கே.எஸ்.ஆர்.குருஞானசம்பந்தன் அளித்தார். [உ-103]

## அடிக்கல் நாட்டப்பட்டது

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகில் உடல்வலுவூட்டல் பயிற்சி நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் கடந்த ஞாயிற்றுக் கிழமையாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ. எவ்.ஜே றூபசிங்கவினால் நாட்டப்பட்டது.

மிக எளிமையாக நடைபெற்ற இவ் அடிக்கல்நாட்டல் வைபவத்தில் விளையாட்டுத் துறை முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிலையத்தை நிர்மாணிப்பதற்கு கல்விபண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் விளையாட்டுத்துறை 10 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (உ-59)

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 4 நாட்கள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம தேசிய கல்வியற் கல்லூரியில் எதிர்வரும் 21,22,23,24 ஆம் திகதிகளில் கல்வி முகாமைத்துவம், வழிகாட்டல் தொடர்பான கருத்தரங்குமேற்படி கல்லூரியின் பீடாதிபதி தி. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் கோப்பாய் பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள், யாழ். மாவட்ட ஆசிரிய நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, முகாமைத்துவ பீடாதிபதி ஏ. நடராஜசுந்தரம், வணிகத்துறைத் தலைவர் க. தேவராஜா மற்றும் சமூகவியல், மெய்யியல் துறைத்தலைவர்கள் வழங்கவுள்ளனர். (உ-9)

## வாக்கு எண்ணும் பணிக்காக வேறு மாவட்டத்தவர்கள் 40 பேர் யாழ். வருவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம தேர்தல் மாவட்டத்தில இம்முறை வாக்கு எண்ணும பணிக்காக 40 பேர் வேறு மாவட்டங்களில் இருந்துவருகை தரவுள்ளதாக யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

தேர்தல் உத்தியோகத்தர்களுக்கான விளக்கக் கூட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்,

அவர்மேலும்கூறியதாவது; தேர்தல உத்தியோகத்தர்கள் பக்கச் சார்பின்றி தமது கடமைகளை ஆற்ற ஏற்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும செய்யப்படும்,

வாக்களிப்பு நிலையங்கள் இராணுவத்தினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப படுவர்.

வாக்களிப்பு நிலையங்களில் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் பொலிஸாரை உடன் அழைக்கும் உரிமை தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார். (உ-106,10)

## நாவலர் சிலை நிறுவல்

(நல்லூர்)

''நாவலர் பெருமானின் திருவுருவச்சிலை'' ஒன்று, வண்ணை நாவலர் மகா வித்தியாலய வளாக முன்றலில் அமைக்கப்படவுள்ளது,

நாவலர் தர்மதாதாச் சபையினரால் நிறுவப்படவுள்ள திருவுருவச்சிலைக்கான அடிக்கல்லை சைவப்புலவர் வ. கந்தசாமி அண்மையில் நாட்டி வைத்தார்.

நாவலர் மகாவித்தியாலயத்தின் 150 வது ஆண்டு விழாவையொட்டி, இச் சிலை நிறுவப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-103)

## சிந்தனைக்கு விருந்து

### அஞ்சல் எனக் காப்பான்

அமிழ்நத் தமிழானை ஆராத கந்தம்
கமழ்கடம்ப னைக்கந்த சட்டி – அமையுமின்று
நெஞ்சில் மறவாமல் நீடாரா தித்திடுவோம்
'அஞ்சல்' எனக் காப்பான் அவன்.

'பழையவன்'

அமெ. ஆஸி

# கிறிஸ்தவமத போதகர்கள் தலிபானால் விடுதலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவ மதத்தைப் போதித்த குற்றத்திற்காக 3 மாதகாலமாக தடுத்துவைக்கப்பட்டிருந்த வெளிநாடுகளைச் சேர்ந்த 8 கிறிஸ்தவர்கள் நேற்று முன்தினம் தலிபான்களால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் நான்கு ஜேர்மனியர்களும், இரண்டு அவுஸ்திரேலியர்களும் இரு அமெரிக்கர்களும் இருப்பதாக ஆப்கானிஸ்தான் புலனாய்வுப் பிரிவொன்றைமேற்கோள்காட்டி ஜேர்மன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், தமது பிரஜைகள் விடுதலை செய்யப்பட்டமை குறித்து உறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையென அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் ரோணர் தெரிவித்துள்ளார்.

(உ-5)

# தலிபான்களின் பின்னடைவுக்கு நிதி நெருக்கடியே காரணம்

## அமெரிக்கா தெரிவிப்பு

(வாஷிங்டன்)

ஒஸாமாபின்லேடன் நிதி நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளதாகவும்,

இதனால் ஆப்கானிஸ்தானின் தலிபான் படையினரும் ஒஸாமாபின்லேடனின் தீவிரவாத அமைப்பான அல்கெய்டா இயக்கமும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் திணறுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஒஸாமாபின்லேடனுக்கு சேரவிருந்த 50 மில்லியன் அமெரிக்க டொலரை தாம் முடக்கியுள்ளதுடன் பல்வேறு நாடுகளும் இவர்களின் வங்கி வைப்புக்களை முடக்கி வருவதை அடுத்து நிதி நெருக்கடியால் அவர்கள் தமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஒத்திப் போட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை எந்தவொரு பேராளிக் குழுக்களினதும் சொத்துக்களை முடக்கவோ அல்லது சுவீகரிக்கவோ எந்தவொரு நாட்டிற்கும் அதிகாரமில்லையென லெபனான் பிரதமர் ராபீக் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளை அழித்தொழிக்கவோ அல்லது அவர்களின் சொத்துக்களை முடக்கவோ ஐக்கிய நாட்டுச் சபைக்கு மாத்திரமே அதிகாரம் உண்டென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-5)

## பாண்டிச்சேரியில்

# காங்கிரஸின் உறவை அ.தி.மு.க. முறித்தது

(புதுச்சேரி)

பாண்டிச்சேரியில் ரங்கசாமி தலைமையிலான காங்கிரஸ் அரசிற்கு அளித்துவந்த ஆதரவை அ.இ.அ.தி.மு.க. நேற்றுமுன்தினம் நிறுத்திக் கொண்டது.

புதுவை அரசு அமைக்கப்படும்போது அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் காங்கிரஸிற்கு ஆதரவு கொடுத்தனர். அமைச்சர் பதவி கிடைக்கும் என நம்பித் தமது ஆதரவைக்கொடுத்த அ.இ.அ.தி.மு.க. அந் நம்பிக்கை வீண்போனதால் ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கான கடிதத்தை புதுவைத் துணைநிலை ஆளுநரிடம் புதுவை அ.இ.அ.தி.மு.க. செயலர் நடராஜன் கையளித்துள்ளார்.

(து)

# தூத்துக்குடியில் வாகனவிபத்து 32 பேர் பலி; பலர் படுகாயம்

(சென்னை)

தமிழ்நாடு தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் அரசுபேருந்து ஒன்றும் தனியார் வான்ஒன்றும் மோதிக் கொண்டதில் 32 பேர் இறந்தனர். 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரு வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் ஸ்தலத்திலே 27 பேர் பலியாகினர். 5 பேர் மருத்துவமனையில் பலியாகினர்.

இறந்தவர்கள் அத்தனை பேரும் வானில்வந்தவர்கள் என்றும் காயமடைந்தவர்களில் ஐவர்தவிர ஏனையோர் பயணிகள்என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்குவதில் அரசுதரப்பினர் முனைந்து வருவதாகவும் ஸ்தலத்திற்கு உயர்அதிகாரிகள் சென்று பார்த்துவந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(து)

## உதைபந்தாட்ட உலகின்

# நம்பர்-10 மரடோனா விளையாட்டில் இருந்துஓய்வு

(புவனர்ஸ் அயர்ஸ்)

உலக உதைபந்தாட்ட ரசிகர்களால் பெரிதும் விரும்பப்பட்டவரும் ஆர்ஜன்ரீன அணியின் கப்டனாகவும், ஆர்ஜன்ரீனா அணி உலகக் கோப்பையை வெல்வதற்காக சிறந்த முறையில் அணியை வழி நடத்திச் சென்றவருமான டியேகோ மரடோனா உலக விளையாட்டரங்கில் இருந்து ஒய்வு பெற்றுள்ளார்.

போதைப்பழக்கத்திற்கு ஆளாக இருந்த மரடோனா உதைபந்தாட்ட விளையாட்டில் இருந்து முன்னரே ஓய்வு பெற்றார் எனினும், கடைசியாக ஒரு போட்டியில் விளையாட வேண்டும் என்று ரசிகர்கள் வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே கடும் பயிற்சிகளில் கடந்த ஆறு மாதமாக ஈடுபட்டு தனது உடல் நிறையை குறைத்து கடந்த சனியன்று பிரிவுபசாரப் போட்டியில் விளையாடினார்.

உலக உதைபந்தாட்ட அரங்கில் பிறேசிலின் பீலேக்கு அடுத்து 10 ஆம் நம்பர் பனியனுக்கு பெருமை சேர்த்தவர் மரடோனா என்பதும், உதை பந்தாட்டத்தில் 10 ஆம் நம்பர் என்றால் அது மரடோனா என்றுகூறும் காலம் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

(உ-2)

## பந்து வீச்சு பற்றி

# விசாரிக்க கோரிக்கை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானிய வேகப்பந்து வீச்சாளரான சொய்ப் அக்தரின் பந்து வீசும் முறைகுறித்து எழுதப்பட்ட சந்தேகங்களைத்தொடர்ந்து அக்தரின் பந்து வீச்சு பற்றி முழுமையான விசாரணை தேவை என்று சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் பாகிஸ்தான்கிரிக்கெட்கட்டுப்பாட்டுச் சபைகோரியுள்ளது.

வளர்ந்து வரும் வேகப்பந்து வீச்சாளர்களில் அக்தரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-2)

# பல்கலை மாணவிகளின் பொருட்கள் திருட்டு

## விடுதியில் திருடர் துணிகரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவிகளின் நகை, பணம், பொருள்கள் ஆகியன அவர்கள் தங்கியிருக்கும் விடுதியிலிருந்து களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும்அறிய வருவதாவது: இச்சம்பவம் கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்றுள்ளது திருநெல்வேலி பலாலி வீதியிலுள்ள முன் ஒழுங்கையில் இருக்கும் இம் மாணவிகளின் விடுதியில் திருடர் பட்டப்பகலில் துணிகரமாகப் புகுந்து இத்திருட்டைச் செய்துள்ளனர்.

திருட்டுப் போன பணமும், பொருள்களும் சேர்த்து 70 ஆயிரம் ரூபா மதிக்கப்படுகிறது.

குறித்த தினத்தன்று காலை 8.00 மணிக்கு மாணவிகள் விரிவுரைக்குச் சென்றுதிரும்பி வந்தபோது திருட்டுபபோயுள்ளமை அவர்களுக்குத் தெரிய வந்தது. இவர்கள் அனைவரும் கிழக்குமாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

இத்திருட்டு குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து சந்தேகப் பேர்வழிகள் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். திருநெல்வேலிப் பகுதியில் அண்மைக்காலமாக திருடர் தொல்லைஅதிகரித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(எ)

# நேபாள இளவரசி ஹெலி விபத்தில் பலி

(காட்மண்டு)

நேபாள இளவரசி பிரக்கியா ஹெலி விபத்தொன்றில உயிரிழந்துள்ளார். இவருடன் கூடப் பயணம் செய்தமேலும் ஐவரும் இந்த சம்பவத்தில் பலியாகியுள்ளனர்.

அண்மையிற் காட்மண்டுவிலிருந்து சுமார் 550 மீற்றர் தொலைவிலுள்ள நாரா ஏரிக்கருகிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணங்கள் எதுவும் கண்டறியப்படவில்லையென நேபாளப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சில மாதங்களுக்கு முன்னர் நேபாள அரசகுடும்ப அங்கத்தவர்கள் இளவரசரினால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-4)

உலக தரிசனம்

# கிறிஸில் பூமியதிர்ச்சி

(ஏதென்ஸ்)

கிறிஸ்நாட்டின் தலை நகரானஏதென்ஸில்பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நிகழ்ந்த இப்பூமியதிர்ச்சி 4.5 றிச்டர் அளவில் பதிவாகியுள்ளது.

1999 இல் இங்கு நிகழ்ந்த பூமியதிர்ச்சியில் 143 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் தற்போதைய சேதவிபரங்கள் பற்றிய தகவல்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

[உ-5]

# வாக்காளர் அட்டைகள் நவ.21 முதல் விநியோகம்

(யாழ்ப்பாணம)

யாழ். மாவட்டத்திற்கான வாக்காளர் அட்டைகள விநியோகம் இம் மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான 7 தினங்கள் இடம் பெறவுள்ளதாக யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். செயலகத்தினால் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டம் அடங்கலாக சுமார் 6 இலட்சத்து 33 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் கையளிக்கப்பட்டதாகவும்,

அவற்றை அந்தந்த பிரதேச ரீதியாக விநியோகத்தின் பொருட்டு அனுப்பி வைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை இவ் விநியோகப் பணி சனி, ஞாயிறு தினங்களிலும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

[உ-3]

# ஆப்கானின்பெரும்பகுதிதலிபான்கள் வசமே தற்போதும் உள்ளதாம்

## அவர்களே பகிரங்கமாக அறிவிப்பு

(கண்டகார்)

ஆப்கானிஸ்தானில 70 வீதமான நிலப்பரப்பு இன்னமும் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும்,

ஒஸாமாபின்லேடன் மற்றும் தமது தலைவர் முல்லா மொகமட் ஓமர் ஆகியோர் பாதுகாப்பாக உள்ளதாகவும் தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

கண்டகாரின் பெரும் பகுதி தமது பூரண கட்டுப் பாட்டில் இருப்பதாகவும் அவர்கள் உறுதிபடக்கூறியுள்ளனர்.

இதேவேளை, ஆப்கான் வடக்குக் கூட்டணி படைகள் தொடர்ந்தும் முன்னேறி வருவதாகவும் ஒஸாமாபின்லேடனின் மறைவிடங்களெனச் சந்தேகிக்கப்படும இடங்கள் மீது அமெரிக்க விமானப் படையினர் குண்டுமாரி பொழிவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(உ-5)

# பண்ணிசை வகுப்பு

(நல்லூர்)

வண்ணை - நாவலர் மகா வித்தியாலயத்தில், ''நாவலர் தர்மகர்த்த'' சபையினரால் 'பண்ணிசை வகுப்பு'' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதன், வெள்ளி ஆகியதினங்களில் மாலை 4.00 மணி முதல் 5.00 மணிவரை இப் பண்ணிசை வகுப்பு இடம் பெற்று வருகிறது.

இப்பண்ணிசை வகுப்பில் கலந்து பயிலவிரும்புபவர்கள் நாவலர் மகாவித்தியாலய அதிபர் நடராசா சிவராஜாவுடன் தொடர்பு கொளளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-103]

# நிதிசேகரிக்கும் நடவடிக்கை

(நல்லூர்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியின், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரிப் பரிசில் நிதியத்திற்கான நிதியினைச் சேகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

பரிசில் நிதியத்தின் வைப்பினை அதிகரிப்பதற்காக, பெற்றோர்களிடமிருந்து சிறு தொகையைப் பெற்று வைப்பிலிடுவதென அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(செ-103)

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்
குறள்

# வலம்புரி

## முதலாவது தேர்தலா?

நாடாளாவிய பொதுத் தேர்தல், வேட்பாளர்கள் மத்தியில் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில் வேட்பாளர்கள் முன் வைக்கும் வாக்குறுதிகளைப் பார்த்தால், 2001 ம் ஆண்டிலேயே இலங்கையின் முதலாவது பொதுத் தேர்தல் நடைபெறுவது போலவும் இப் பொதுத் தேர்தல் மூலமே முதலாவது பாராளுமன்றம் கூடுவது போலவும் கற்பனை உலகிலிருந்து வேட்பாளர்கள் கதையளக்கத் தொடங்கி விட்டனர். கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவது போல் தேர்தல் பிரசாரங்கள் அமைகின்றது.

இவை நாட்டின் ஒட்டுமொத்தப் பார்வையாக இருந்தாலும், தென்னிலங்கையில் சிங்களக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நோக்கும்போது பெரும்பாலான கட்சிகள் தாம் ஆட்சிக்கு வந்தால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவோமெனத் தெரிவித்துள்ளனர். இதில் பெரும் ஆச்சரிய மென்னவெனில் விடுதலைப் புலிகளுடன் பேசக்கூடாதென நிபந்தனை விதித்த பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கிய ஜே.வி.பி கூட விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண முடியுமெனத் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளனர்.

இதிலிருந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்த வேண்டுமென்பதையே சிங்கள மக்கள் விரும்புகிறார்கள் என்பதை அறியமுடியும். கடந்த காலங்களில், விடுதலைப் புலிகளுடன்பேசியே இனப்பிரச்சினைக்கு ஆறு மாதங்களுக்குள் தீர்வு காணுவேன் எனக் கூறிய பின்னரே சிங்கள மக்கள் தமது வாக்குகளை சந்திரிகா குமாரதுங்காவுக்கு வழங்கியிருந்தனர்.

ஆனால் அதனை ஜனாதிபதி நிறைவேற்ற வல்லை மாறாக தேர்தல் முடிந்து ஆட்சியைக் கைப்பற்றியபின்னர் பௌத்த பீடாதிபதிகளினதும் பேரினவாதிகளினதும் கோட்பாட்டுக்குள் நின்று ஜனாதிபதியும் – பிரதமரும் மாறிமாறி புலிகளைப் பயங்கரவாத அமைப்பு எனக் கூறுவதில் மகிழ்வு கண்டனர் அதன் முடிவு சிங்கள இனம் பலமான ஆட்சியை அமைக்கும் சக்தியை இழந்துவிட்டது.

வெள்ளி நற்சிந்தனை

# கந்தன் கழல் போற்றும் கந்த சஷ்டி விரதம்

# வந்த துன்பங்களை யெல்லாம் போக்கவல்லது



இறைவழிபாடுகுறைகளை நீக்கி நிறைவு தரும் முக்கியமாக விரத நாட்களில் இறைவனை வழிபடுவது அதிக வலிமையையும் பெரும் பயனையும் தரும். விரத நாட்களில் இறை அன்புடன் வழிபாடுபுரிபவர்கள் பாவங்களினின்றும் நீங்கி புண்ணியம்பெற்றுஇகம் பரம் வீடு என்ற மும்மைநலங்களையும் எளிதில் பெறுவார்கள்.

### சிறப்பு மிக்க கந்த சஷ்டி விரதம்

விரத காலத்துக்கு அதிக வலிமையுண்டு 'பாலோடாயினும் காலமறிந்து உண்' என்பது பழமொழி இன்று ஆரம்பமாகும் முருகனுக்குரிய கந்த சஷ்டி விரதத்தை உண்ணாது நோன்பிருந்து ஆலயவழிபாடு செய்து கந்த புராணம் கந்த சஷ்டிக்கவசம் திருமுறைகள் முதலியவற்றை ஓதிப்பிரார்த்தனையில் ஈடுபட்டு வருவோர்க்கு உடல் நலமும், வாக்கு நலமும் மனநலமும் ஏற்படும். வினைகள் விலகும், அருளாற்றல் உண்டாகும்.

விரதம் என்பதன் பொருள் விளங்காது விரதம் காப்பதாகக் கருதுவதுபயனற்றதாகும். விசேட விரதம் பற்றி நல்லை நகர் நாவலர் பெருமான் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். விரதமானது மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனுஞ்சுருக்கியேனும் மனம், வாசகு, காயம், என்னும்மூன்றினாலும் கடவுளைவிதிப்படி மெய்யன்போடு வழிபடுதலாகும்.

இன்று கந்தசஷ்டி விரதம் ஆரம்ப நாளாகும். முருகப் பெருமானுக்குரிய சுக்கிர

**சமூகஜோதி கா. கணேசதாசன்**

வார விரதம், கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் ஆகிய மூன்றிலும் கந்த சஷ்டி விரதம் சிறப்பு மிக்கது.

### ஆறு நாள் உபவாசம்

கந்த சஷ்டி விரதம் ஐப்பசி மாதத்துச் சுக்கில பட்சத்து முதற்றினமாகிய பிரதமை முதலாகச் சஷ்டி ஈறாகவுள்ள ஆறு தினங்கள் அனுஷ்டிக்கப் படவேண்டும். இவ்விரதங்களை முசுகுந்தச்சக்கரவர்த்தி அனுஷ்டித்து இஷ்ட சித்திகளை எல்லாம் பெற்றார் எனக் கந்தபுராணத்தில்கூறப் பட்டிருக்கிறது.

இவ்விரதத்தைபுலன்பொறி வழிபோகாதிருத்தற்பொருட்டுக் கோயில்களிலேயே தங்கிப் பிடிப்பது நம்முன்னோரது வழக்கம். இவ்விரதத்தை அதாவது அமாவாசையின் அடுத்த நாளாகிய பிரதமை முதல் சட்டியீறாக அனுஷ்டிப்பர்.

சிலர் ஆறு நாட்களும் உபவாசமிருந்து ஆறாம் நாள் துயில் கொள்ளாது. காலை எழுந்து ஆசார சீலராய் ஏழு மணிக்கு முன் முருகனுக்கு அமுது படைத்துசுற்றஞ்சூழலிருந்து பாரணம் பண்ணுவர்.

வேறுசிலர் ஐப்பசிப பூர்வ பக்கப் பிரதமை முதல் ஐந்து நாட்களும் ஆசார சீலராய் உணவருந்திஆறாம் நாளாகிய சஷ்டியன்று உபவாசமிருந்து அன்றிரவும் துயிலாது முருகனைத் தியானித்தபடி, காலையெழுந்து ஆசார சீலராய் முருகனுக்கு அமுது படைத்து நிவேதித்துச்சுற்றம் சூழவிருந்து பாரணம் முடிப்பர்.

### சூரபன்மன்

வாழ்க்கையில் குழந்தைப் பேறில்லாதவர்கள் இவ்விரதத்தை விதிமுறையாக ஆறு வருடங்கள் நோற்றால் குழந்தைப்பேறு கிடைக்கும் என்று கூறுவார்கள். இதனால் தான் கிருபானந்த வாரியார் அவர்கள் 'சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்று கூறினார்கள்.

பிரமயாகத்தில் தக்கனால் நிந்திக்கப்பட்ட திருநந்தி தேவர் தக்கனைப் பார்த்து 'உன்னைச் சார்ந்த இந்தத் தேவர்களும் அளவில்லாதயுக காலஞ் சூரபன்மன் என்னும் அசுரனாலே துன்பத்தில்மூழ்குவாராக' என்று மற்றைய சாபங்களோடு சாபமிட்டார்.

எனினுஞ் சூரபன்மன்செய்த தவத்தின பெறுபேறாகஅவன் தேவசேனாதிபதியாகிய சண்முகப்பெருமானை சேவலும் மயிலுமாக அன்றும் இன்றும் என்றும் சேவை செய்யும் பெரும் பாக்கியத்தைப் பெற்றுள்ளான்.

### அனுக்கிரகம் பெறலாம்

இவ்வாறே கலியுகவரதனாகிய கந்தப் பெருமானை நாம் தவறு செய்து விட்டாலும் அவற்றினை உணர்ந்து மனம் திருந்தி உள்ளன்போடுவணங்கினால் வரப்பிரசாதங்களைப் பெறலாம். துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம் போம், நெஞ்சில் பதிப்போர்க்கு செல்வம் பலித்தோங்கும். எனவே கந்தசஷ்டி விரதத்தை விதிப்படி நோற்றால் கந்தனின் அனுக்கிரகம் பெறலாம். நாமும் ஆசாரத்துடன் அனுஷ்டித்து முருகப் பெருமானின் திருவருளைப் பெறுவோமாக. □

தவத்திரு யோகர் சுவாமிகள்

# ஞான அருள் பெற்ற; சிவத்திரு

# சுப்பிரமுனிய அமெரிக்க சுவாமிகள்

ஹவாயில் கடந்த 12ந் திகதி சமாதியடைந்த ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகளின் ஞானகுரு கொழும்புத்துறையில் வாழ்ந்த தவ முனிவர் யோகர் சுவாமிகள் ஆவர்.

அவர் யோகர் சுவாமிகளைச் சந்திக்க முன்பு அமெரிக்காவில் சிறந்த 'ஸ்ரிப்' நடனக் கலைஞராக விளங்கினார். யாழ்ப்பாணத்திற்கு அவர் வந்தபோது ஆன்மீக உந்துதலால் யோகர்சுவாமிகளைச் சந்திக்கச் சென்றார் யோகர் சுவாமிகள் அவரது முதுகில் ஓங்கி அறைந்து (This Will be Heard America) இது அமெரிக்காவில் கேட்கும் என்று ஆங்கிலத்தில் திருவாய் மலர்ந்தார். அதுவே அவருக்கு ஞான தீட்சையாகி மெய்ஞ்ஞானம் தூண்டப்பெற்றார்.

### அளவெட்டியில் ஆசிரமம்

அவர் அளவெட்டியில் ஆச்சிரமம் அமைத்து அதை ஆன்மீகப் பணியகமாக மாற்றினார். ஹவாய் சென்று அங்கு பெரிய சிவன் கோவிலைக்கட்டினார். ஆச்சிரமம் நிறுவினார், சீடர்களுடன் அங்கு தவவாழ்வு வாழ்ந்து சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் பல நூல்களை எழுதினார். பத்திரிகை ஒன்றையும் வெளியிட்டுவந்தார்.

யோகர் சுவாமிகளது திருவுருவச் சிலையினை பல நாடுகளுக்கு எடுத்துச் சென்றார். அவர் பல வருடங்களின் பின் சிவசின்னங்களைத் தரித்து தவக் கோலத்தில் யாழ்ப்பாணம்

**கபிலர்**

வந்தபோது அவரைப்பார்ப்பதே அரியதோர் அருட்காட்சியாகத் திகழ்ந்தது. உயர்ந்த சிவந்த உருவம் சிவபெருமானைத் தவக்கோலத்தில் படங்களில் பார்ப்பதுபோல் மனதை ஈர்த்தது.

### நல்லை ஆதீனத்தில்

அவருக்கு நல்லை ஆதீனத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அவருடன்வந்த பல அமெரிக்க அடியார்கள் நல்லை ஆதீன முதல்வரிடம் (இப்போது உள்ளவர்) தீட்சை பெற்று உருத்திராக்கமும், காவியுடையும்வாங்கித்துறவு பூண்டனர்

சுவாமிகளிற்கு இங்குள்ள ஆலயங்களிலும் - பொது நிறுவனங்களிலும் பக்தி பூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டது. எல்லா இடங்களிலும் அவர் ஆங்கிலத்தில் இனியகுரலில் அழகான சொற்களில் அருளுரை ஆற்றினார். சைவமே மெய்ச்சமயம் அதற்கு ஆதியும் அந்தமும் இல்லை. அதன் கருத்துக்களை உண்மையாக விளங்குவதற்கு சிவனின் அருள் வேண்டும். எல்லாரும் இந்த அரிய பிறவியை வீணாக்காது சிவபெருமானை வழிபடுங்கள். உண்மைச் சைவராக வாழுங்கள் என்ற கருத்துக்களையே அவர் எங்கும் வலியுறுத்தினார்.

### ரமேஷ்குமார்

கொப்பாயில அவருக்கு ஒரு சைவ இளைஞர் மன்றம் அளித்த வரவேற்பில் அயமன்றத்தைச் சேர்ந்த ரமேஷ்குமார் அவர் பாதங்களில் வீழ்ந்து தன்னை சீடனாக்கும்படி வேண்டி விம்மி அழுதார் சுவாமி அவருக்கு ஆறுதல் கூறி தந்தை கனகரத்தினத்தைச் சுட்டிக்காட்டி உங்கள் மகனைப் பற்றி நீங்கள் பெருமை கொள்ள வேண்டும் அவனுக்குசிவன்அருள் கிடைத்திருக்கிறது. அவர் சிவபெருமானின் பிள்ளை என்று ஆறுதல் அருளி ரமேஷ்குமாரைத் தன்னுடன் அழைத்துச்சென்றார்.

ரமேஷ்குமார் அவரின் பிரதம சீடரில் ஒருவராகவும், சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவதில் சிறந்த பேச்சாளராவும் திகழ்வதாக ஒருமுறை அவர் தந்தை என்னிடம் உளப்பூரிப்புடன் கூறினார்.

யோக சுவாமிகளின் அன்று அடித்த அடி அமெரிக்காவில கேட்டுக் கொண்டிருந்தது மாத்திரமல்ல, பல நாடுகளிலும் எதிரொலித்துக் கொண்டும் இருந்தது.

அடி பெற்றவர் அடியவராகி சிவபெருமானது சீரடி பரவி அடியார்களின் இதயங்களில் அருள்மழை பொழிந்துஞானப் பயிர்வளர்த்தவண்ணம்சிவப் பேரானந்தத்திலே திளைத்தார்.

அப்பேராளர் ஆடவல்லானின் திருவடிகளைச் சேர்ந்த பேற்றினை மனத்திருத்திஅவர் வழி செல்வோமாக.

## தினசரி தியானம்

## பொறுமை

உள்ளும் புறம்பும் ஒரு படித்தாய் நின்றுசுகங்
கொள்ளும் படிககிறை நீகூட்டிடவுங்
– காண்பேனோ?

**தாயுமானவர்**

பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் பண்படுத்தும் பெரிய பொருளே; உன்போன்று நான பொறுமை படைத்திருப்பேனாக.

அமைதி ஆற்றலுக்கு அறிகுறி பயிற்சியில் பண்பாடு அடைந்து பொறுமையுடன் இருக்கும் மனதில் ஆற்றல் மிக உண்டு. எப்படி வினையாற்றுவது என்பது பொறுமையாளனுக்குத் தெரியும் அவன வீண்பேச்சுப் பேசான். அவனுடைய வேலைத் திட்டம் யந்திரம் போன்று ஒழுங்கானது. முன்யோசனை அவனுக்கு மிகவுண்டு. நாடியகருமத்தை முறையாக அவன் செய்து முடிப்பான், இதுவே பொறுமையின் விளைவு.

**ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்**

# விடுதலைப்புலிகளுடனானயுத்தத்தை அரசு திடகாத்திரமாக எதிர்க்கும்!

## அமைச்சர் டி.எம் ஜயரட்ன

(கொழும்பு)

தற்போது நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழீழவிடுதலைப் புலிகளுடனான யுத்தத்தினை திடகாத்திரத்துடன் எதிர் கொண்டு வடக்குக் கிழக்குப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதையே பொதுஜனஐக்கியமுன்னணிகுறிக்கோளாக கொண்டுள்ளது என பொஜனஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜெயரத்தினா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

இவ்வமைப்பு மக்கள்அனைவரும், இனம், மதபாகுபாடு இன்றி ஒன்றாக வாழவேண்டும் அவர்கள் நாட்டின் எப்பகுதியில் இருந்தாலும் சுதந்திரமாக வாழ்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவதே பொதுஜன ஐக்கியமுன்னணியின் குறிக்கோளாகும்.

வடக்குகிழக்கு மாகாணங்களில் இடைக்கால அரசுஒன்றைநிறுவி அதனைவிடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதே ஐக்கியதேசியக்கட்சியின் திட்டம் என்றும் அவர்கூறினார். (வ)

### புலிகளின்

ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகி மயிரிழையில் உயிர் தப்பியமையும் அவரின் கண்ணில் பாதிப்பு ஏற்பட்டமையும் தெரிந்ததே. (இ)

### 30தீர்மானங்கள்

ஞர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பாக சமுர்த்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைகளைஅமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

சமுர்த்திஉதவிபெறும்குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாவை 7.5 வீத வட்டியுடன் கடனாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 250 ரூபா, 350 ரூபா 450 ரூபா சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கான கொடுப்பனவு ஜனவரி முதல் 500 ரூபாவாகவும், 700 ரூபா, 900 ரூபாவைப் பெறும் குடும்பங்களுக்கு 1200 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

கூட்டுறவுத்துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஒய்வூதியம் சுகாதாரக் காப்புறுதி, விபத்துக் காப்புறுதி, வீடமைப்புக் கடன் ஆகியன அமுலுக்கு கொண்டுவரப்படவுள்ளது. இவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வசதிகளும் செய்யப்படவுள்ளது. (வ)

## ஐ. தே. கட்சியின் பிரசாரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டம் இன்று பி.ப.3 30மணிக்குசித்தன்கேணி பிள்ளையார் கோவில் முன்றலில் இடம்பெறும்.

இதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் முதன்மை வேட்பாளருமான தி.மகேஸ்வரன் மற்றும் கட்சி வேட்பாளர்கள் உரையாற்றவுள்ளனர். [கு]

## மாணவனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கட்கிழமை பாடசாலைக்குப் புறப்பட்டுச்சென்ற மாணவன் இதுவரை வீடு திரும்பவில்லையென மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

2ம் குறுக்குத்தெரு பாசையூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலங்கைநாதன் தஜேந்திரன் (வயது 13) என்ற இளவாலை சென். றோய் கல்லூரியின் 8ம் ஆண்டு மாணவனையேகாணவில்லையென முறையிடப்பட்டுள்ளது. (இ-9)


ஐக்கிய தேசியக் கட்சி - யாழ் மாவட்டம்

கொள்கை விளக்கமும்

மாபெரும் பிரசாரக் கூட்டமும்

இடம்: சித்தன்கேணி பிள்ளையார் கோவில் முன்றல்

காலம்: 16-11-2001 இன்று பி.ப 3.30 மணி

சிறப்புரை: திரு. தி. மகேஸ்வரன்
(ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முதன்மை வேட்பாளரும்)

=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=

அனைத்து ஆதரவாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=★=

உங்கள் வாக்கு:



4 ☒

ஐக்கிய தேசியக் கட்சி
யாழ். மாவட்டம்.

(கி-2879)


## தமிழக அகதி முகாமில் ஈழத் தமிழர் உண்ணாவிரதம்!

(சென்னை)

தமிழ்நாடு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர் ஒருவர் வெளிநாடொன்றில் அரசியல் தஞ்சம் தரவேண்டுமென்று கோரி உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு செங்கல்பட்டு சிறப்பு அகதிமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கிருபா செல்வக்குமார் என்பவரே உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளார்.

இவர் தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

முகாமை விட்டு எங்கும் செல்லமுடியாதுள்ளதெனவும் பிள்ளைகள் கல்விகற்க உரிமை மறுக்கப்பட்டுள்ளதெனவும் குற்றம் சாட்டியுள்ள பிரஸ்தாப நபர், நோர்வே, சுவிடன், சுவிஸ்லாந்து, டென்மார்க், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளிடம் 'யு.என்.எச்.சி. ஆர்' அமைப்பின்ஊடாகஅரசியல் தஞ்சம் வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேற்படிநாடுகள் யு என்.எச்.சி.ஆர் அமைப்பின் ஊடாக தமதுநாட்டுக்கு வருமாறு அனுமதி வழங்கியிருந்தன.

அனுமதி வழங்கப்பட்ட போதும் மூன்று வருடங்களுக்கு பின்னரே இந்திய அதிகாரிகள் யு.என்.எச்.சி. ஆர் அமைப்புக்கு அழைத்துச் சென்றதாகவும், அவர்கள் தன்னிடம் ஆவணங்களை பெற்றுக் கொண்டபோதும் இதுவரைஎதுவிதநடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் இதனாலேயே தான்உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்ததாகவும் தெரிவித்துள்ளார். (இ)

## பத்திரிகையாளர் மாநாடு இன்று

[யாழ்ப்பாணம்]

புளொட் அமைப்பின்பத்திரிகையாளர் மாநாடு இன்று கட்சியின் யாழ் அலுவலகத்தில் காலை10மணிக்குஅமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ)

### மட்டக்களப்பில்

மேலும் தெரியவருவதாவது:

மட்டக்களப்பு ஸ்ரீபாலகட்டிடத் தொகுதிக்கு முன்பாக இராணுவப் புலனாய்வுத் துறையினர் கதைத்துக் கொண்டு நின்ற போது இத் தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்றஇடத்தில் பொலிசார் தேடுதல் நடத்திய போது கைப்பற்றப்பட்ட அடையாள அட்டையில் இருந்து தற்கொலை குண்டுதாரியென சந்தேகிக்கப் படும் நபர் ஐயங்கேணியைச் சேர்ந்த தங்கவேல் சிறிதரன் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இக் குண்டுத் தாக்குதலால் ஸ்ரீபால கட்டிடத் தொகுதியில் உள்ள மூன்று கடைகள பலத்த சேதத்திற்குள்ளானது.

இச் சம்பவத்தை அடுத்து குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற பகுதி சுற்றிவளைத்து தேடுதல் நடத்தப் பட்டது இத் தேடுதலின் போது ஆட்டோசாரதி ஒருவர் ஆட்டோவுடன் கைது செய்யபபட்டுள்ளார்.

பொலிசாரால் கைப்பற்றப்பட்ட ஆட்டோவில் வெடிப் பொருட்கள் இருந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுவதுடன் வேறோர் இடத்தில் அநாதரவாக நின்ற சைக்கிள் ஒன்றும் பொதி ஒன்றும்கண்டு பிடிக்கப் பட்டுளளது.

இக்குண்டுத் தாக்குதலில் இராணுவப் புலனாய்வுப பிரிவைச் சேர்ந்த கோப்ரல் சுப்பிரமணியம் மகேஸ்வரன், எஸ். ரவிச்சந்திரன், லான்ஸ் கோப்ரல் மகாலிங்கம் சந்திர குமார் ஆகியோரே கொலை செய்யப் பட்டவர்களாவர். (வ - இ)

## முத்தமிழ் விழா

வலிகிழக்குப் பிரதேசசபை டிசம்பர் மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் முத்தமிழ் விழாவினை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. (எ-239)

## மகளிர் தின விழா

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தின் மகளிர் குழுவினால் மகளிர் தின விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுளளது.

இவ் விழாவில் யாழ்ப்பாணம் தாதிமார் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் செல்வி பி. வீரகத்திப்பிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-77)

## கிரிக்கெற் சங்கம் அழைப்பு

யாழ்மாவட்ட கிறிக்கெற் சங்கத்தின் மத்தியஸ்தர்குழுவில் விண்ணப்பித்தவர்கள அனைவரும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளபபட்டுள்ளனர். [ந]

### பரீட்சை முடிவுகள் திங்கள் வெளியாகும்

தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் பயிற்சி முடித்து வெளியேறிய முதலாவது பிரிவிற்குரிய பரீட்சை முடிவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடு செய்யப்படும்.

பரீட்சை எடுத்த மாணவர்கள் திங்கட்கிழமை 10 மணிதொடக்கம் அறிவிப்பு பலகையில் அல்லது அலுவலகத்தில் இதனை பார்வையிட முடியும்.

பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக மேற்படி நிலையத்தின் இயக்குனர் என். நந்தகுமார் அறிவித்துள்ளார். (ந)


★ உன்னத கலை நயம் மிக்க தங்க நகைகளுக்கு...

நியூ ராதிகாஸ் நகை மாளிகை

189, கஸ்தூரியார் வீதி, (சி 2212) யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் நவம்பர் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.